மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, கவனஈர்ப்புத் தீர்மானம் பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தால், ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு முறை கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டால், அதிக நேரம் ஆகும் என்பதால். ஒவ்வொரு கேள்வி கேட்பதற்கு அனுமதி கொடுப்பது என்கிற முறையை நாம் கடைபிடித்து வருகிறோம். அதைப் போலவே, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறுகின்ற போதும், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேச வேண்டும் என்று வைத்து இருக்கிறோம். அந்த முறையில் தான் இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அதனை முதல் வாய்ப்புக் கொடுக்கின்றபோதே பயன்படுத்தி, இரண்டு கேள்விகள் கேட்டுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

6. **அரசினர் தீர்மானம்.**

விதி **32(1)**—ஐ—த் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1)—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

2. **அறிவிப்புகள்**—(தொடர்ச்சி).

(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.